398

# கேரளாவில் அராஜகமா?

398
H-

(ஆகஸ்ட் 7-ந் தேதி முதல் 12-ம் தேதிவரை திருவனந்தபுரத்தில் கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாக கமிட்டியின் தீர்மானம்)

கம்யூனிஸ்ட் கட்சி
நாடு கமிட்டி
சென்னை-1

V2,4'N24
N58
182171

[விலை அணா 2

# கேரளாவில் அராஜகமா?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கவுன்சிலின் மத்திய நிர்வாகக் கமிட்டி கேரளத்தில் தற்பொழுதுள்ள நிலைமையைப் பரிசீலித்தது.

ராஜ்யத்திலுள்ள நிலைமையைப்பற்றித் தவறானதும், திரித்துக் கூறப்பட்டதுமான ஒரு காட்சியை பிரதம மந்திரியும், எதிர்க்கட்சிகளும் சித்தரித்துள்ளனர் என்று கமிட்டி கருதுகிறது.

எதிர்க் கட்சிகள் சித்தரிக்கும் சட்டமின்மையும், பாதுகாப்பற்ற நிலைமையும் முழுமையாகத் தவறானது என்று உறுதியாகக் கூறும் அதே சமயத்தில், காங்கிரஸ், இதர சில எதிர்க்கட்சிகள், ஆதிக்கக் கும்பல்கள் ஆகியோரின் நடவடிக்கைகளால், இந்த ராஜ்யத்தில் சிருஷ்டிக்கப் பட்டுள்ள நிலைமைகள் குறித்து கமிட்டி கவலைகொள்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் மந்திரிசபை அமைவதை இந்தக் கட்சிகளும் பிற்போக்கு சக்திகளும் ஒருபொழுதும் அன்புடன் ஏற்றுக் கொள்ளவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் கிடைத்த இந்த வெற்றியைத் தடுக்க முடியாததாலும், கடந்த பொதுத் தேர்தல்களில், மக்கள் கொடுத்த தீர்ப்பை பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்ள விரும்பாததாலும், எதிர்க்கட்சிகளும் ஆதிக்கக் கும்பல்களும் அவதூறு செய்வது, கேவலமாகப் பேசுவது, அழிவுசெய்வது, ஆத்திர மூட்டல் போன்ற காரியங்களில் ஈடுபட்டனர்.

**கம்யூனிஸ்ட்கட்சி தலைமையிலுள்ள மந்திரி சபை, பதவியேற்ற 72 மணி நேரத்திற்குள், அப்பொழுது காங்கிரசின் பொதுக் காரியதரிசியாக இருந்த திரு. ஸ்ரீமன் நாராயண் கேரள ராஜ்யத்தில் அராஜகமும், பந்தோபஸ்தற்ற நிலையும் இருப்பதாகக் கூச்சலிட ஆரம்பித்தார்.**

---

**குறிப்பு: ஆகஸ்ட் மாதம் 7-ந் தேதி முதல் 12-ம் தேதி வரை திருவனந்தபுரத்தில் கூடிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டி கேரள நிலைமைபற்றி நிறைவேற்றிய தீர்மானத்தின் தமிழாக்கமே இப்பிரசுரம்.**

மத்திய சர்க்கார் மந்திரிகளான திரு. மொரார்ஜி தேசாய், திரு. எஸ். கே. பட்டீல் உள்பட, அநேக காங்கிரஸ் தலைவர்கள் ஒருவர்பின் ஒருவராக இந்த பஜனையில் சேர்ந்து கொண்டனர்.

இந்தத் தலைவர்களின் உதாரணத்தைப் பின்பற்றி, ஸ்தல காங்கிரஸ் தலைவர்கள்; அவர்களின் போஷகர்களும், கேரளத்தி லுள்ள மிக மோசமான சுரண்டல்காரர்களுமான வெள்ளைக்கார தோட்ட முதலாளிகள்; குறிப்பாக செல்வங் கொழுத்த நிலச்சு வான்தார்கள் ஆகியோர் "அராஜகமும், பந்தோபஸ்தின்மையும்" நிலவுவதாக பொய்ப் பிரச்சாரத்தை கதை கதையாகக் கட்டவிழ்த்து விட்டனர்.

ஜனாதிபதி ஆட்சியைத் திணிப்பதற்கும், மத்திய அரசாங் கத்தைதலையிடச் செய்வதற்குமான நிலைமைகளைச் சிருஷ்டிப்பதும் தான், ஆரம்பத்திலிருந்தே அவர்களுடைய நோக்கம்.

மக்களுடைய எந்த நியாயமான இயக்கத்திற்கும், போராட் டத்திற்கும் எதிராக போலீசார் உபயோகிக்கப் படமாட்டார்கள் என்ற தன்னுடைய கொள்கைப் பிரகடனத்தை கேரள அரசாங்கம் வெளியிட்டதிலிருந்து, இத்தகைய பிரச்சாரம் திட்டவட்டமாக தீவிரப் படுத்தப்பட்டது என்ற முக்கியமான உண்மையை எடுத்துக் காட்டுவது அவசியமானது என்று மத்திய நிர்வாகக் கமிட்டி கருது கிறது. நமது நாட்டிற்கே முன் உதாரணமாக, முதல் தடவை யாக அறிவிக்கப்பட்ட இந்தக் கொள்கைப் பிரகடனம் கேரளத் தில் மட்டுமின்றி, இந்தியா முழுவதிலுமுள்ள சாதாரண மக்களால் ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டது.

மேலும், பிரகடனப் படுத்தப்பட்ட நமது கட்சியின் கொள் கையைப் பின்பற்றி, மக்களுக்குள்ள சுதந்திரத்தையும், ஜனநாயக உரிமைகளையும் விரிவுபடுத்துவதற்காக கம்யூனிஸ்ட் தலைமையி லுள்ள கேரள மந்திரி சபை துரிதமான பல நடவடிக்கைகளை எடுத்தது.

இந்த ராஜ்யத்தில் இதுவரை பிரஜா உரிமைகளை நசுக்கு வதற்கு காரணமாயிருந்த தடைகளும் கட்டுப்பாடுகளும் அகற்றப் பட்டன. (இதர ராஜ்யங்களில் இன்றும் இதே கட்டுப்பாடுகளுக் கும், தடைகளுக்கும் உட்பட்டுத்தான் எதிர்க் கட்சிகள் செயல்பட வேண்டியுள்ளன)

அரசியல் ஊழியர்களைப் பின் தொடர்ந்து வேவு பார்க் கும் கெட்ட பழக்கம் நிறுத்தப்பட்டது; அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேசும் பேச்சுக்களை குறிப்பெடுக்கக் கூடாது என்று போலீசாருக்கு கட்டளையிடப்பட்டது. கூட்டங்கள்,

ஆர்ப்பாட்டங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த எல்லாவிதமான கட்டுப்பாடுகளும், முதல் தடவையாக வாபஸ் பெறப் பட்டன.

அரசியல் கட்சிகளுக்கும், தொழிற் சங்கங்கள் விவசாயி சங்கங்கள், இதர பொது ஜன ஸ்தாபனங்களுக்கும், கேரளத் தின் ஒவ்வொரு பிரஜைக்கும் மிக அதிகபட்ச சுதந்திரம் இதன் மூலம் உத்திரவாதப் படுத்தப்பட்டது. இதைப் போல், அவர்கள் எந்தக் காலத்திலும் அனுபவிக்கவில்லை.

ஜனநாயகத்தின் பெயரால் பிரமாணம் செய்கிற காங்கிரசும் இதர எதிர்க் கட்சிகளும் கடந்த காலத்திலிருந்து பெரிய அளவில் மாறுபட்டுள்ள இந்த புதிய நிலைமையை வரவேற்று, நமது பொது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், கேரள மக்களுக்கு சேவை செய்யவும் இந்த வசதிகளைப் பயன் படுத்தி இருப்பார்கள் என்று யாரும் நினைக்கக் கூடும்.

## சீர்திருத்தங்களை எதிர்ப்பதற்கே ஜனநாயக உரிமைகளை துஷ்பிரயோகம் செய்தனர்

பொதுஜன ஸ்தாபனங்களுக்கும், தனிநபர்களுக்கும் ஜன நாயக உரிமைகளையும், சுதந்திரத்தையும் விரிவுபடுத்தியதை ராஜ்ய காங்கிரஸ், பி. சோ. கட்சி ஆகியவற்றின் தலைமையில் ஆதிக்கம் வகிப்பவர்களும், கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த பிற்போக்காளர்களும், இதர ஆதிக்கக் கும்பல்களும் தகாத முறையில் பயன்படுத்த ஆரம்பித்தனர். ராஜ்யத்தில் சீர்குலைவு, பலாத்கார நடவடிக்கைகளை வளர்க்கவும், முற்போக்கான நடவடிக் கைகள் எடுப்பதையும், அமுல்நடத்துவதையும், தடுப்பதற்காகவும் அவர்கள் இந்தப் புதிய வசதிகளைப் பயன்படுத்தினர்.

காட்டாம்பள்ளியில் சர்க்காருக்குச் சொந்தமான நிலத்தை நிர்ப்பந்தமாகவும், சட்டவிரோதமாகவும் ஆக்கிரமித்துக்கொண்டு, சர்க்காருக்குச் சொந்தமான தரிசுநிலத்தை விநியோகம் செய்யும் அரசாங்க நடவடிக்கைகளை முறியடிக்க முயற்சித்தது, அதைப் போலவே அரசாங்கத்திற்குச் சொந்தமான காடுகளில் உள்ள நிலங்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் அரசாங்கக் கொள்கையை முறியடிக்கும் நோக்கத்துடன் காட்டு நிலங்களை அநியாயமாகவும், சட்டவிரோதமாகவும் ஆக்கிரமித்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக கல்வி மசோதாவை முட்டாள்தனமாக எதிர்த்தது, ஆகிய இத்தகைய துரோகத்தனமான முயற்சிகள் எல்லாம்—அவர்களுடைய சீர்குலைவு பலாத்காரப் போக்கிற்கு

ஆதாரங்களாகும். கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த பிற்போக்காளர்கள் எப்படி கிட்டத்தட்ட ராணுவம் போன்ற கிறிஸ்தோபர் படைகளைத் திரட்டினார்கள் என்பதும், ஒழுங்கீனமான பலாத்கார செயல்களைப் புரிவதற்காக அவர்களோடு காங்கிரஸ்காரர்கள் கைகோர்த்துக்கொண்டதும் நாடறிந்த விஷயமாகும். மந்திரிகளைக் கொலைசெய்வதற்குப் பகிரங்க அறைகூவல்கள் விடப்பட்டன; மந்திரிகளைத் தாக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றன.

நிலவெளியேற்றம் செய்யப்படுவதிலிருந்து, அரசாங்கத்தால் பாதுகாப்பளிக்கப்பட்டிருந்த விவசாயிகள், குண்டர்களால் தாக்கப்பட்டு அவர்களுடைய நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். பம்பா பள்ளத்தாக்கு விவசாயிகளின் தலைவரும், தோட்டக் காடுகளிலுள்ள இரண்டு தொழிற்சங்கத் தலைவர்களும், கம்யூனிஸ்டுகளும் அவர்களுடைய ஆதரவாளர்களுமான மூன்றுபேர்களும் இரத்தங்கக்கும்படி கொலைசெய்யப்பட்டனர். பயமுறுத்தலையும் துவேஷத்தையும் வளர்க்கும் இயக்கத்தில், அவர்கள் புரிந்த எண்ணற்ற வெளிப்படையான செயல்களில் இவைகள் மிகச் சிலவே. உருப்படியான எதிர்க்கட்சியின் பாத்திரத்தை வகிக்கவும், கேரளத்திற்கும் அதன் மக்களுக்கும் சேவைசெய்ய ஆக்கப்பூர்வமான வேலைகளில் ஈடுபடவும் இந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, இந்த எதிர்க்கட்சிகளெல்லாம், அவர்களுடைய நடவடிக்கைகளில், கம்யூனிஸ்ட்கட்சிக்கெதிராக அவர்களிடமிருந்த குருட்டுத்தனமான துவேஷத்தையே வழிகாட்டியாகக் கொண்டிருந்தனர் என்பது வருந்தத்தக்கது.

**எப்படியும், இத்தகைய ஆத்திரமூட்டக் கூடிய அஸ்திவாரமற்ற குற்றச் சாட்டுகளால் கேரளாவிலும், நாட்டின் இதர பகுதிகளிலுமுள்ள மக்களை, எதிர் பார்த்தது போல், தவருகஇழுத்துச் செல்ல முடியவில்லை. தேவிகுளம் உபதேர்தல் இதை துலாம்பரமாக எடுத்துக் காட்டிற்று; இந்தஉப தேர்தலில் காங்கிரசும், எதிர்க்கட்சிகள் அனைத்தும் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தன; ஆனல், இந்த உபதேர்தல் இவர்களுக்குத் தக்க பதிலடி கொடுத்தது. எதிர்க்கட்சியினர் பின்பற்றி வந்தபாதையை நிராகரித்ததுமின்றி, கேரள அரசாங்கத்திற்கும் அதன் கொள்கைகளுக்கும் ஆதரவாக இன்னும் அதிகமான எண்ணிக்கையில் கேரள மக்கள் திரண்டுள்ளனர் என்பதை இந்த தேர்தல் நிரூபித்துக் காட்டியது.**

இந்த உபதேர்தல் பரீட்சையிலிருந்து, படிப்பினை கற்றுக் கொள்வதற்குப் பதிலாக, ராஜ்யத்திலுள்ள காங்கிரஸ், பி. சோ., பு. சோ. கட்சிகளின் தலைவர்கள் ஜனநாயக விரோதமான சட்ட விரோதமான பலாத்கார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினர்.

மாணவர்களில் ஒரு பகுதியினரை இந்த நடவடிக்கைகளில் இழுப்பதில் அவர்கள் வெற்றி பெற்றனர். நீர்ப் போக்கு வரத்து கார்ப்பரேஷன் அமைக்கப்பட்ட பிறகு, மாணவர்களிடமிருந்து எவ்வித கோரிக்கையும் வராமலேயே அரசாங்கம், தானுகவே முன் வந்து நீர்ப் போக்கு வரத்தை உபயோகிக்கும் எல்லா மாணவர் களுக்கும் பிரயாணக் கட்டணங்களில் ஐம்பது சதவிகிதத்தை குறைத்து ஒரு பொதுச் சலுகையை வழங்கிற்று; இந்தச் சலுகை யினுல் ஆயிரக் கணக்கான மாணவர்கள் பயனடைந்தனர். ஆனுல், சில படகுச் சொந்தக்காரர்கள் இரண்டு பள்ளிக்கூடங்களிலுள்ள சுமார் 100 மாணவர்களுக்கு ஏற்கனவே கொடுத்திருந்த ஒரு சலு கையின் காரணமாக, அரசாங்கம் இவ்வளவு தாராளமான சலுகை காட்டியிருந்த போதிலும்கூட, மேற்படி 100 மாணவர்களும் முன்பு கொடுத்து வந்ததைவிட கொஞ்சங் கூடுதலான கட்டணம் கொடுக்கவேண்டி இருந்தது. மாணவர்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டிவிடவும், அவர்களை ஊக்குவித்து அரசாங்கத்திற்குச் சொந்தமான கார்களைத் தாக்கவும், பொதுச் சொத்தை நாசமாக்க வும் இந்த சந்தர்ப்பம் பயன்படுத்தப்பட்டது. இந்தக் கிளர்ச்சி யில் நூற்றுக்கும் அதிகமான அரசாங்கப் போக்குவரத்து வாகனங் கள் நாசமாக்கப்பட்டு, அதன் விளைவாக அரசாங்கத்திற்கு ஒரு லக்ஷம் ரூபாய்க்கும் அதிகமாக நஷ்டமேற்பட்டது.

## அவர்களுடைய "போராட்டங்கள்"

சீதாராம் மில் மூடப்படுவதன் விளைவாக அந்தமில் லில் வேலை பார்க்கும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தொழி லாளிகளுக்கு ஏற்படவிருந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை தவிர்க்கும் நோக்கத்துடன் அந்த மில்லின் நிர்வாகத்தை அரசாங் கம் ஏற்றுக் கொண்டது. அந்த மில்லின் நிர்வாகக் கமிட்டியில், தொழிலாளிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர். அந்த மில்லில் நூல் சுற்றப்பட்ட பாபின்கள் ஏராள மாகக் குவிந்து விட்டன. ஸ்பின்னிங் டிபார்ட்மெண்டுக்கு தேவை யான காலி பாபின்கள் இல்லாமல் போனதால், இதர டிபார்டு மெண்டுகளிலுள்ள அநேக இயந்திரங்களுக்கு வேலை இல்லாமல் போயிற்று. நூற்றுக் கணக்கான தொழிலாளிகள் வேலையில்லாமல் போவதைத் தடுப்பதற்காக, வைண்டிங் செக்ஷனிலுள்ள ஒரு டஜன் தொழிலாளிகளை அவர்களுடைய சம்பளங்களிலும், இதர ஊதியங்களிலும் எவ்வித நஷ்டமும் ஏற்படாத முறையில், ரீலிங் செக்ஷனுக்கு மாற்றுவதற்கு நிர்வாகக் கமிட்டி தீர்மானித் தது. இந்த தொழிலாளிகளில் ஐந்துபேர், இந்த உத்தரவை மீறும் படி, லேபர் காங்கிரசால் தூண்டிவிடப் பட்டனர்.

இப்படிச் செய்தது தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அல்ல; அதற்கு மாருக, அரசாங்க அலுவலகங்களின் முன்னுல் மறியல் செய்யவும், இந்தவிதமாக மோதலை வளர்ப்பதற்கும் ஒரு காரணத்தை சிருஷ்டிக்கவே இப்படிச் செய்தனர்.

இந்த தொழிற் சாலையில் வேலை செய்யும் பெருவாரியான தொழிலாளர்களின் — அவர்கள் தொடர்ந்து மில்லை நடத்தி வந்தனர் — ஆதரவைப் பெற முடியாததால், ஆயிரத்துக்கும் அதிகமான மற்றவர்களை (இவர்கள் பெரும்பான்மையோர் காங்கிரஸ்காரர்கள்) வெளியிலிருந்து இறக்குமதி செய்து, போலிப் போராட்டத்தின் திரை மறைவில் சர்க்கார் காரியாலயங்களின் வேலைகளைத் தடைப் படுத்தினர்.

## அரசாங்கம் நிதானமாக நடந்து கொண்டது

இங்கிலையில், எதிர்க்கட்சிகளால் சீர்குலைவு பலாத்கார நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த போதிலும், அரசாங்கம் மிகுந்த கண்காணிப்புடன் நடந்து கொண்டது. எப்பொழுதும் பிரச்னைகளுக்குத் திருப்திகரமான பரிகாரம் காண முயற்சித்தது. பிரதானமாக காங்கிரஸ், பி.சோ. கட்சிகளின் நடவடிக்கைகளினுல் தோன்றிய மோதல் நிறைந்த சூழ்நிலையில்தான் மிகவும் வருந்தத்தக்கதும் பயங்கரமானதுமான வரண்டரப் பள்ளி கைகலப்பு ஏற்பட்டு அதன் விளைவாக ஐவர் இறக்கவும், இன்னும் சிலர் காயமுறவும் நேரிட்டது.

**மத்திய நிர்வாகக் கமிட்டி இத்தகைய சம்பவங்களுக்காக வருந்துகிறது; மேலும், பல்வேறு கட்சிகளும் எவ்வித அபிப்பிராயபேதங்கள் இருந்த போதிலும் இத்தகைய பயங்கர சம்பவங்கள் மீண்டும் ஏற்படா திருத்தங்கள் செல்வாக்கைப் பிரயோகிப்பார்கள் என்று நம்புகிறது. இத்தகைய சம்பவங்கள் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கவும், தவிர்க்கவும், பொது வாழ்வில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொதுவான விதி முறைகளை வகுப்பதற்காக கேரளத்திலுள்ள எங்களுடைய கட்சி எதிர்க் கட்சிகளுடன் விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறது.**

கம்யூனிஸ்ட்கட்சி சட்டத்திற்கு உட்பட்டு ஆட்சி செய்வதற்காக நிற்கிறது; அதே சமயத்தில், ஸ்தாபனங்களும், தனிநபர்களும் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொள்வதை எதிர்க்கிறது. எல்லோருக்கும் சமநீதி கிடைக்கவும், சட்டப்படி அனைவருக்கும் சமத்துவம் கிடைக்கவும் அது நிற்கிறது.

சந்தனத்தோப்பில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திற்காக மத்திய நிர்வாகக் கமிட்டி ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது. நாட்டிலுள்ள தொழிலாளிகளும், இதர ஜனநாயக சக்திகளும் அடைந்துள்ள ஆழ்ந்த துக்கத்திலும், மனவேதனையிலும் அது பங்குகொள்கிறது. மக்களுக்கு அதனுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதோடு, இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்கு கமிட்டி தன் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறது. எந்தச் சூழ்நிலைகளில் இந்தச் சம்பவம் ஏற்பட்டதென்ற விஷயம், ஒரு விசாரணையின் முன் உள்ளது. இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்டயீடு கொடுக்கும் கேரள சர்க்காரின் நல்லெண்ணத்தையும், இந்தச் சம்பவத்தைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு நீதிமன்ற விசாரணை கொண்டுவர கேரள மந்திரிசபை எடுத்துக்கொண்ட நடவடிக்கையையும் மத்திய நிர்வாகக் கமிட்டி பாராட்டுகிறது. வருங்காலத்தில் இத்தகைய துரதிஷ்டவசமான சம்பவங்கள் ஏற்படாதபடி தடுப்பதற்காக எல்லா விதமான முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்று மத்திய நிர்வாகக் கமிட்டி மக்களுக்கு உறுதி கூறுகிறது.

வரண்டரப்பள்ளியில் ஏற்பட்ட கைகலப்பு சம்பந்தமாக, அரசியல் தொடர்புகளைக் கவனிக்காமலே அநேகர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதையும், வழக்கமானச் சட்டப்படி ரீதியில், விஷயங்கள் நடந்து வருகின்றன என்பதையும் மத்திய நிர்வாகக் கமிட்டி கவனத்தில் கொண்டுள்ளது. இந்த வழக்கில் நிர்வாகம் துரிதமாக எடுத்துக் கொண்ட நடவடிக்கையானது, நிர்வாகத்தின் பாரபட்சமற்ற தன்மையைப்பற்றிய சந்தேகங்களை அகற்றியிருக்கும்.

கேரளத்திலுள்ள காங்கிரஸ், இதர எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைகள் இப்படி இருக்கும்பொழுது, கேரள மந்திரி சபைக்கு எதிராக, வெளிப்படையாக, அபாண்டமான குற்றச் சாட்டுகளைப் பொழியவும் விஷயங்களைத் திருத்திக் கூறவும் பிரதமர் நேரு முன் வந்திருப்பது மிகவும் துரதிருஷ்ட வசமானதாகும். கேரளத்தில் "பந்தோபஸ்தின்மை" நிலவுவதாகக் குற்றச் சாட்டுகளைக் கூறும்பொழுது, பிரதமர் உண்மைகளுக்கு போதிய மதிப்புக் கொடுக்கவில்லை. தான் கூறுபவைகளுக்கெல்லாம் ஆதாரமாக அவர் கீழ்க் கண்டவற்றைக் குறிப்பிடுகிறார். (1) வரண்டரப்பள்ளி கைகலப்பில் ஏற்பட்ட ஐந்து பேர்களின் பரிதாபகரமான மரணம். (2) சில வழக்கமான நிர்வாக நடவடிக்கைகள். (3) சில வழக்குகளை வாபஸ் வாங்கியது.

வீரண்டரப்பள்ளி சம்பவங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், போலீசார் துரிதமாக நடவடிக்கை எடுத்துள்ளனர். தனக்கு நன்ருகத் தெரிந்திருந்தும், பிரதம மந்திரி இந்த உண்மையை அலட்சியப்படுத்திவிட்டார் என்று தோன்றுகிறது.

அவருடைய கட்சி ஆளுகிற அநேக ராஜ்யங்களில், அரசியல் கொலைகள் நடைபெற்றுள்ளன என்பது பிரதம மந்திரிக்கு நிச்சயமாகத் தெரியும். அவருடைய சொந்த ராஜ்யமான உத்தரப்பிரதேசத்தில், பி.சோ. கட்சியைச்சேர்ந்த ஒரு சட்ட சபை உறுப்பினர் முன் கூட்டியே திட்டமிட்டபடி தாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். இரண்டு வாரங்களுக்கு முன்புதான், அசாம்கார் ஜில்லாவில், நகர்ப் பிரதேசக் கமிட்டியின் தலைவரான ஒரு கம்யூனிஸ்ட் கொலை செய்யப்பட்டார். இத்தகைய அநேக உதாரணங்களை மேற்கு வங்காளம், மத்ய பிரதேசம், சென்னை, ஆந்திரா போன்ற ராஜ்யங்களிலிருந்தும் கொடுக்க முடியும்.

ராமனுதபுரம் ஜில்லாவில் நடைபெற்ற கலகங்களில், அரசியல் நோக்கத்துடன் பதினுன்கு பேர்களை இரத்தங் கக்கக் கொலை செய்தார்கள் என்று கடுமையான குற்றச்சாட்டுகளை சென்னை ராஜ்ய போலீசாருக்கு எதிராக சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா எதிர்க் கட்சிகாரர்களும், கட்சி சார்பற்ற பொதுமக்களும் கடந்த வருஷத்தில் தானே கூறினுர்கள்! இந்தக் கடுமையான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக ஒரு நீதிமன்ற விசாரணை வேண்டும் என்ற கோரிக்கைக்குக்கூட அரசாங்கம் இணங்கவில்லை.

இவைகளும், இதர சம்பவங்களும் பிரதம மந்திரியின் மனதில் "பந்தோபஸ்தின்மை" பற்றிய எவ்விதப் பயத்தையும் ஏற்படுத்தியதாகத் தோன்றவில்லை.

அரசாங்கம் எடுத்துள்ள நிர்வாக நடவடிக்கைகள் பற்றி, மிக அதிகமாகப் பேசப்படுகிறது; கேரள அரசாங்கத்தின் பதினுறு மாத ஆட்சிக் காலத்தில், எதிர்க் கட்சியினர் மூன்று விஷயங்களைத் தான் தோண்டி எடுத்துள்ளனர்.

ஒரு போலீஸ் சப்இன்ஸ்பெக்டரைத் தற்காலீகமாக நீக்கிவைத்தது இவற்றில் ஒன்ருகும். பிரிவினைக்கு முன்பிருந்த சென்னை ராஜ்யத்தில், மலபார் ஜில்லாவில் நாட்டிகா என்ற இடத்தில் அவர் சப்-இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தபொழுது, காங்கிரஸ் உட்பட சகல கட்சிகளும் அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரின. அப்போதைய சென்னை சட்டசபையிலும் இதே

கோரிக்கை எழுப்பப்பட்டது. ஒரு கைதியை சித்திரவதை செய்த தாக அவர் மீதுள்ள குற்றச்சாட்டுகளின்மீது போலீஸ் இலாகா மூலம் விசாரணை நடந்து கொண்டிருக்கும்பொழுது, இந்தச் சித்திர வதையை அம்பலப்படுத்திய திருவனந்தபுரம் நகரசபை உறுப்பினர் ஒருவரை பகிரங்கமாகத் தாக்கியதாக புதிய குற்றச்சாட்டுகள் இதே சப்-இன்ஸ்பெக்டர்மீது கொண்டு வரப்பட்டன.

**காங்கிரஸ் பி. சோ. கட்சியினரை பெருவாரியான அங் கத்தினர்களாக கொண்ட திருவனந்தபுரம் நகர சபை, இந்த சப்இன்ஸ்பெக்டருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிற்று.**

ஒரு பூர்வாங்க வழக்கிற்கான அடிப்படை ஏற்பட்ட பிறகு, இந்தச் சூழ்நிலையில்தான், விசாரணை முடியும் வரை கேரள அரசாங்கம் அவரைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி (suspended) வைத்தது.

இரண்டாவது விஷயம், திருவனந்தபுரத்திலுள்ள நீதிப் பிரி வைச்சேர்ந்த ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் முதல் வகுப்பு அதிகாரங்களை (First Class Powers) வாபஸ் பெற்றது பற்றியதாகும். **இத் தகய அதிகாரங்களை வழங்குவது, வாபஸ் பெறுவது பற்றிய விஷயங்கள் கேரள உயர் நீதி மன்றத்தால் தீர்மானிக்கப் படுகிறது என்பதை கேரள அரசாங்கத்தைக் குற்றம் சாட்டு பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட மந்திரி சபை, உயர் நீதி மன்றத்தின் சிபார்சுகளை அப்படியே பழக்கத்திலுள்ளதுபோல, அமுல் நடத்துகிறது.**

மூன்றாவது விஷயம், ஒரு ரெவின்யு டிவிஷனல் ஆபீசரை வழக்கம்போல் மாற்றியது பற்றியதாகும். இந்த மாற்றத்தைப் பற்றி யாரும் கவனிப்பது கூட இல்லை.

## பாரபட்சம் காட்டுவது யார்?

காங்கிரஸ் அரசாங்கங்கள் உள்ள ஒவ்வொரு ராஜ்யத்திலும் மத்திய அரசாங்கத்திலும் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் எதிராக அரசியல் உள் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட பல வேறு நடவடிக்கைகள், வேலையிலிருந்து நீக்கிவிடுவது, தற்காலிகமாக நீக்கி வைப்பது போன்ற எண்ணற்ற வழக்குகள் விஷயத்தில் பிரதம மந்திரி கவனம் செலுத்துவது நல்லது. தன்னுடைய தீர்ப்பில்

ராஜ்ய அரசாங்கத்திற்கு எதிராக சில விஷயங்களைக் குறிப்பிட்டார் என்பதற்காக ஒரு ஜில்லா நீதிபதிகூட ஓய்வு எடுத்துக் கொள்ளும் படி நிர்ப்பந்திக்கப்பட்டார்; இதைப்போல அநேக சம்பவங்கள் உண்டு.

காங்கிரஸ் அரசாங்கங்களின்கீழ் உள்ள நிர்வாகங்களில், அரசியல் காரணங்களுக்காக பாரபட்சம் காட்டப்படுவதென்பது, வெகு காலத்திற்கு முன்பே ஒரு பெரிய ஊழலாகிவிட்டது. மேலும், அரசாங்க வேலைகளுக்கான நியமனங்களும்கூட, மனுதாரர்களின் அரசியல் ஸ்தாபன தொடர்புகள், அரசியல் அபிப்பிராயம், ஆகிய வைபற்றி ரகசிய போலீஸ் அறிக்கைகளைப் பின்பற்றியே செய்யப் படுகின்றன. கம்யூனிஸ்ட்களோடு எப்படியோ கொஞ்சம் தொடர்புள்ளவர்கள் என்று போலீஸார் அனுப்பும் குறிப்புகளில் கண்டுள்ள நபர்களுக்கு வேலை மறுக்கப்பட்டுள்ளது. கம்யூனிஸ் டுகளோடு எவ்விதத்திலாவது தொடர்புள்ளவர்களை விசாரணை யின்றி வேலையை விட்டு நீக்க வேண்டும் என்று சுற்றறிக்கைகள் காங்கிரஸ் அரசாங்கங்களால் அனுப்பப்பட்டுள்ளன என்பது அனை வரும் நன்கு அறிந்த விஷயம். வேறு எக்காரணமுமின்றி, தன்னு டைய பந்துக்களில் யாரோ ஒருவர் கம்யூனிஸ்டாக இருக்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் பலர் வேலையை விட்டு நீக்கப் பட்டுள்ளனர்.

இந்த விஷயத்தில், கேரள சர்க்கார் அனுஷ்டிக்கும் கொள் கையும் நடைமுறையும் காங்கிரஸ் அரசாங்கங்கள் கையாளும் வழி களிலிருந்து முற்றிலும் வேறு பட்டது. நிர்வாகத்தில் எந்த வடி வத்திலும், உருவிலும் அரசியல் பாரபட்சம் காட்டாத ஒரே ராஜ்யம் இந்தியாவிலேயே கேரளாதான் என்று கூறுவதில் மத்திய நிர்வாகக் கமிட்டி பெருமைப்படுகிறது. சேவகன் உட்பட சகல விதமான நியமனங்களும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் செய்யப் படுகிறது.

மனு செய்திருப்பவர்களின் அரசியல் நம்பிக்கைகள், நடவடிக் கைகள் அல்லது ஸ்தாபன தொடர்புகள் பற்றிய எவ்வித போலீஸ் அறிக்கையும் கேட்பதில்லை.

வழக்குகள் வாபஸ் பெறப்பட்டது பற்றிய பிரதம மந்திரியின் குற்றச் சாட்டுகள் அர்த்தமற்றவை என்பதோடன்றி தவறானவை யும் ஆகும்.

அநேக வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன; அநேக கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்த நடவடிக்கைகளின் விளைவாகக் கம்யூனிஸ்டுகளும், அவர்களு

னுடைய ஆதரவாளர்களும் பலனடைந்ததைவிட அதிகமாக காங்கிரஸ்காரர்களும் இதர எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பயனடைந்தனர் என்ற உண்மையை சொல்லாமல் பிரதமர் மறைத்து விடுகிறார்.

உயர் நீதிமன்ற பிரிவு கோரி—எல்லாக் கட்சியினரும் நடத்திய கிளர்ச்சி சம்பந்தமான பதினெட்டு வழக்குகள், கோட்டயம் கலெக்டர் ஆபீஸ் முன்பு (காங்கிரசைச் சேர்ந்த ஹைலண்டு விவசாயிகள் சங்கம் நடத்திய சத்தியாக்கிரகம் சம்பந்தமான ஆறு வழக்குகள், காட்டாம்பள்ளியில் காங்கிரஸ், பி.சோ. கட்சிகளால் ஆரம்பிக்கப்பட்ட நில ஆக்கிரமிப்பு சம்பந்தமான 67 வழக்குகள், அரசாங்கப் போக்கு வரத்து ஊழியர்களுக்கு எதிராக எர்ணுகுளம் மாணவர்கள் நடத்திய கிளர்ச்சி சம்பந்தமான 102 வழக்குகள், ஐ.என்.டி.யு.சியால் ஆரம்பிக்கப்பட்ட கொச்சி துறைமுக கிளர்ச்சி சம்பந்தமான 199 வழக்குகள் திரு. பனம்பள்ளி கோவிந்தமேனனால் ஆரம்பிக்கப்பட்ட "புகழ் பெற்ற" சீதாராம் மில் போராட்டம் சம்பந்தமான 659 வழக்குகள், சக்கை மராமத்து இலாகா ஓர்க்ஷாப் போராட்டம் சம்பந்தமான பு. சோ. ஊழியர்கள் மீதுள்ள ஒன்பது வழக்குகள் ஆகியவை வாபஸ்பெறப்பட்டுள்ளன.

## வழக்குகள் வாபஸ் பெறுவது பற்றிய அரசாங்கக் கொள்கை

தொழிலாளிகள், விவசாயிகள் அல்லது அரசியல் கட்சிகள் நடத்தும் இயக்கம் அல்லது கிளர்ச்சி முடிவுக்கு வரும்பொழுது, தகராறில் சம்பந்தப்பட்ட கட்சியினரிடையே ஒரு நல்லெண்ண சூழ்நிலையைச் சிருஷ்டிப்பதற்காக, இத்தகைய கிளர்ச்சி சம்பந்தமான வழக்குகளை வாபஸ் பெறுவதும், இந்த இயக்கத்தையொட்டித் தண்டிக்கப்பட்டவர்களின் தண்டனையை வஜா செய்வதும் அரசாங்கத்தின் கொள்கை. இந்தக் கொள்கையைப் பின்பற்றியே, இந்த வழக்குகளெல்லாம் வாபஸ் வாங்கப்பட்டன.

மேலே சொல்லப்பட்ட உண்மைகளிலிருந்து, இந்தக் கொள்கை எவ்வித கட்சி வித்தியாசம் பாராமலும், பாரபட்சமற்ற முறையிலும் அமுல் நடத்தப்பட்டது—இப்பொழுதும் அமுல் நடத்தப்பட்டுக்கொண்டு வருகிறது என்பது தெரியவரும். உண்மையில், கம்யூனிஸ்ட்கள் சம்பந்தப்படுத்தப்பட்ட பல வழக்குகள் இன்றும் நீதிமன்றங்களிலே விசாரணையில் இருந்து வருகின்றன ; எங்கள் அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு

முன்பாகக் கடுமையான குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட சில கம்யூனிஸ்ட்கள் இன்னும் சிறையிலிருக்கிறார்கள். இவ்விஷயத்தில், அரசியல் காரணங்களுக்காகப் பாரபட்சம் காட்டுவதாக திரித்துக் கூறுவது, எல்லாவற்றிலும் மிகமோசமானதாகும்.

## நேருவின் ஒருதலைப்பட்சமான அளவுகோல்கள்

பிரதம மந்திரி நேரு கேரளத் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு வருத்தம் தெரிவித்திருப்பதாகவும், இது பற்றி முதன் மந்திரிக்கு எழுதி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. பிரதம மந்திரியின் துக்கத்தில் யாவரும் பகிர்ந்து கொள்வர். ஆனால் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறும்பொழுது, பிரதம மந்திரி இதுபோன்ற அக்கறை காட்டுகிறாரா என்று இனி மேல் தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

பம்பாயில் சம்யுக்த மகாரஷ்டிரம் கோரி ஆர்பாட்டம் செய்த நூற்றுக்கும் அதிகமான பேர்களை காங்கிரஸ் அரசாங்கம் கொன்று குவித்தது. இந்த மிருகத்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை பிரதம மந்திரி நியாயப்படுத்தினார்; துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலியானவர்களுக்கு ஒரு வார்த்தைகூட அனுதாபம் தெரிவிக்க வில்லை. இந்தச் சம்பவங்களைப் பற்றி விசாரணை நடத்தவும் அவர் மறுத்தார். இதைப் போன்ற சம்பவங்கள் ஆமதாபாத்திலும் நடைபெற்றன; ஆனால், எவ்விதமான விசாரணையும் நடக்கவில்லை. இவைகளுக்காக, பிரதம மந்திரி வருத்தமும் தெவிக்கவில்லை. பல் வேறு ராஜ்யங்களிலுள்ள காங்கிரஸ் அரசாங்கங்கள் திரும்பத் திரும்பப் போலீசைக் கொண்டு துப்பாக்கிப் பிரயோகங்கள் செய் துள்ளன. இவைகளுக்கு எதிராக, திரு நேரு ஓர் வார்த்தைகூடச் சொல்லவில்லை. சென்னைத் துறைமுகத் தொழிலாளிகள் மீதும், ஜாம்ஷெட்பூர் தொழிலாளர்கள்மீதும் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களை நேரு ஆட்சேபிக்கவில்லை. கடந்த வாரத்தில், லக்ஷ்மணபுரியில் மாணவர்கள் மீதுபோலீஸ் துப்பாக்கிப் பிரயோ கம் செய்து ஒருவரைக் கொன்றனர்; ராஜ்ய அரசாங்கம் இதுபற்றி ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த மறுத்துவிட்டது. திரு. நேரு இதைப்பற்றி எதுவும் பேசவில்லை. திரு. நேருவின் ஒருதலைப் பட்சமான, பாரபட்சமான அளவுகோல்களுக்கு, இவை களே, போதிய சாட்சியங்கள்.

நமது குடியரசின் உறுப்பு ராஜ்யங்களில் ஒன்றான கேரள அரசாங்கத்திற்கு எதிராக அபாண்டமான குற்றச்சாட்டுகளையும், அபத்தத்தையும் கூறுவதற்கு பிரதமர் நேரு பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டை மேடையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது மிகவும்

துரதிருஷ்டமானது. பிரதம மந்திரி என்ற ஹோதாவில், இத்தகைய விஷயங்களை அணுகியுள்ள முறை இதுவரை கேள்விப் படாத முறையாகத் தோன்றுகிறது.

கேரள அரசாங்கத்திற் கெதிராக அவர் விட்ட அறிக்கைகள், அவர் அனுஷ்டித்தமுறை ஆகியவற்றின் உண்மையான அர்த்தத்தை, பிரதம மந்திரி, நிச்சயமாகத் தெளிவாக உணர்ந்துள்ளார். பிரதமரின்அறிக்கைகள், சமிஷ்டிநிர்வாகத்தைப் Federal administration) பற்றிய எல்லாவிதமான கோட்பாடுகளுக்கும் முரணாக, ஒரு ராஜ்யத்தின் விவகாரங்களில் அத்துமீறித் தலையிடுவதாகும். பிரதம மந்திரியின் அறிக்கைகள் முறையற்றவை என்பது ஒருபுறமிருப்பினும், இந்த அறிக்கைகள் ராஜ்ய சர்க்காரின்கீழ் வேலை பார்க்கும் அதிகாரிகள், அந்த சர்க்காரின் அதிகாரத்தை அலட்சியப் படுத்தவே உதவி புரியும்; மேலும், கேரள அரசாங்கத்திற் கெதிராகத் திட்டமிட்டு அழிவு வேலைகளிலும், பலாத்கார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களை நிச்சயமாக ஊக்குவிக்கவும் செய்யும்.

ஒவ்வொரு ராஜ்யத்திலுமுள்ள காங்கிரஸ் மந்திரி சபைகளுக்கு எதிராக அநேக கடுமையான குற்றச் சாட்டுகள் பகிரங்கமாகக் கொண்டு வரப்பட்டது நமக்குத் தெரியும்; அடிக்கடி, பொறுப்பான காங்கிரஸ்காரர்களே இத்தகையக் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்துள்ளார்கள். சமீபத்தில்தான் பஞ்சாபிலுள்ள கெய்ரான் மந்திரி சபைக் கெதிராக, பெருவாரியான காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களால் கடுமையான குற்றச் சாட்டுகள் கொண்டு வரப்பட்டன; மேற்கு வங்காள மந்திரி சபைக்கு எதிராக, டாக்டர். பி. சி. ராயின் மந்திரி சபையிலேயே முன்னாள் சட்ட மந்திரியாக இருந்த ஒருவரும், மற்றவர்களும் கடுமையான குற்றச் சாட்டுகளை எழுப்பியுள்ளார்கள். இந்த அரசாங்கங்களுக்கு எதிராக பகிரங்கமாகப் பிரதம மந்திரி எதுவும் சொன்னதாக நாம் அறியோம். மாறாக, இந்தக் குற்றச் சாட்டுகளைக் கொண்டு வந்தவர்களையும். பிரதம மந்திரியின் தலையீட்டைக் கோரியவர்களையும் அவர் முகத்தைச் சுழித்தும், கண்டித்தும் அனுப்பியுள்ளார். ஆனால் தன்னுடைய முடிவுகளை இப்படிப் பகிரங்கமாக அறிவிப்பதற்கு முன்பாகவும், பெருவாரியான தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுத்த அறிக்கைகளின் அடிப்படையிலேயே முடிவுக்கு வருவதற்கு முன்பாகவும், வேறொரு கட்சி ஆட்சி நடத்தும்பொழுது, குற்றச் சாட்டுகளைபற்றி சம்பந்தப்பட்ட அரசாங்கத்தோடு விவாதிக்கக் கூட அவசியமில்லை என்று பிரதம மந்திரி கருதுகிறார் என்று தோன்றுகிறது.

**இப்படிப்பட்ட சகல விதமான தொடர்ச்சியான தடங்கல்களையும், அழிவு வேலைகளையும், எதிர்க் கட்சிகள் செய்த போதிலும் கூட—அரசியல்**

சட்டத்தின்படியுள்ள கட்டு திட்டங்களைப்பற்றி சொல்லவே வேண்டாம்—கேரள அரசாங்கம் சாதித்துள்ள காரியங்கள் சாதாரணமானவை அல்ல; ராஜ்யத்தின் நன்மைக்காகவும், மக்களின் நிலையை அபிவிருத்தி செய்வதற்காகவும் அநேக நடவடிக்கைகளை கேரள அரசாங்கம் உறுதியாக எடுத்தும் அமுல் நடத்தியும் வந்திருக்கிறது. நிலவெளியேற்றத் தடுப்புச் சட்டம், கடன் நிவாரணச் சட்டம், கல்வி மசோதா, நிலச் சீர்திருத்த மசோதா, ஆசிரியர்கள், கிராம அதிகாரிகள், கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்கள் ஆகியோரின் சம்பளங்களை உயர்த்தியது, மலபாரிலும், திரு-கொச்சி பகுதியிலுமுள்ள அரசாங்க உத்தியோகங்களை இணைத்தது ஆகியவை கேரள அரசாங்கம் எடுத்துக் கொண்ட முற்போக்கான நடவடிக்கைகளுக்கு சில உதாரணங்களாகும்.

நிர்வாகச் சீர்திருத்தம் என்ற பிரச்னையை அக்கறையோடு எடுத்துக் கொண்டுள்ள ஒரே ராஜ்யம் கேரளாதான். தொழிலாளர்பால் அதன் கொள்கைகள், இயந்திரத் தொழிலாளர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயித்தது ஆகியவை தொழில் உறவுகளிலே ஒரு புதிய பாதையை வகுத்துள்ளது; அதன் விளைவாக, ராஜ்யத்திலுள்ள எல்லா தொழிலாளிகளுக்கும் கணிசமான வசதிகளை வழங்கியுள்ளது.

இத்தகைய கொள்கைகளின், நடவடிக்கைகளின் விளைவாகத் தான் கேரள அரசாங்கம் ஆதிக்கக் கும்பல்களின் மிக மோசமான தீர்மானமான தாக்குதல்களை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது பொறுக்குக் கமிட்டியின்முன் உள்ள நிலச் சீர்திருத்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டு அமுல் செய்யப்பட்டால், அவர்களுடைய சமூக, அரசியல் தளம் மேலும் சுருங்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். இந்த ஆதிக்கக் கும்பல்கள் நடத்த வேண்டிய போராட்டத்தைத்தான் கேரளத்தில் இன்று காங்கிரஸ் கட்சி நடத்திக் கொண்டிருக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

## ஆரம்பத்திலிருந்தே மத்திய அரசாங்கத் தலையீட்டைக் கொண்டு வருவதே அவர்கள் நோக்கம்

ஆரம்பத்திலிருந்தே, கேரளத்திலுள்ள காங்கிரஸ் கட்சி மத்திய அரசாங்கத் தலையீட்டைக் கொண்டுவருவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட ஒரு தலையீட்டைக் கொண்டுவருவதற்கான நிலைமைகளை சிருஷ்டிப்பதற்காக அது முறையாக வேலை செய்துகொண்டிருந்தது. தன்னுடைய செல்

வாக்கிலுள்ள மக்களை தவறான பாதையில் இழுத்துச் சென்று இந்தக் காரியத்தை எளிதில் நிறைவேற்றி விடலாம் என்று அது நினைத்தது. ஆனால், அதற்கு மாறாக, கேரள அரசாங்கத்தின் கொள்கைகள், நடவடிக்கைகளினால் அரசாங்கத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்களிடம் அதிக ஆதரவு பெருகி வருகிறது என்பதைக் காங்கிரஸ் கட்சி பார்த்தது. எல்லா நம்பிக்கையையும் இழந்துவிட்ட சூழ்நிலையில், ஒரு ஜனநாயக அமைப்பில் எதிர்க் கட்சிகள் செயல்படும் முறைக்கு உகந்த, ஒத்துக்கொண்ட சகல கோட்பாடுகளையும் காங்கிரஸ் கட்சி உதறித்தள்ளத்தீர்மானித்தது.

மத்திய அரசாங்க அதிகாரம் அதனிடம் இருக்கிறது என்ற நம்பிக்கையில், சந்தேகிக்கக் கூடிய முறைகளையும், தந்திரங்களையும் காங்கிரஸ் திட்டமிட்டு அனுஷ்டித்துக் கொண்டுவந்துள்ளது. காங்கிரசின் அகில இந்தியத் தலைமையும், ராஜ்ய காங்கிரஸ் தலைவர்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, இத்தகைய நடவடிக்கைகளை ஊக்குவித்தனர்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற முறையில் திரு. ஜவஹர்லால் நேரு ராஜ்ய காங்கிரசின் இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. அவருடைய சமீபகால அறிக்கைகளை, இப்படிப்பட்ட சந்தேகத்துக்கிடமான முறைகளுக்கு ஆதரவாக மாத்திரமே புரிந்துகொள்ள முடியும்.

ஒரு சாராரின் அறிக்கைகளின் அடிப்படையில், இந்த அறிக்கை விட்டதின் மூலம் பண்டித நேரு ஒருதலைப்பட்சமான, கட்சிக்காரரின் போக்கை கையாண்டுள்ளார் என்றும், இந்தியாவின் பிரதமர் என்பதைவிட, அதிகமாக காங்கிரஸ் கட்சித் தலைவர்போல்தான் நடந்துகொண்டார் என்றும் கூறுவதில் மத்திய நிர்வாகக் கமிட்டிக்கு எவ்வித தயக்கமும் கிடையாது. கேரளாவில் காங்கிரஸ் கட்சி பின்பற்றிவரும் தந்திரங்களையும், நடவடிக்கைகளையும், இதர ராஜ்யங்களிலுள்ள எதிர்க்கட்சிகள் கையாண்டிருந்தால், அக்கட்சிகளைக் கண்டிப்பதில் பண்டித நேரு முதல் ஆளாக இருப்பார்.

கேரளத்திலுள்ள அபிவிருத்திகளையும், உண்மையான நிலைமைகளையும் வைத்து மதிப்பிட்டால் கேரள கம்யூனிஸ்ட் மந்திரி சபை மக்களுடைய ஜனநாயக உரிமைகளையும், சுதந்திரத்தையும் நசுக்கவில்லை என்பதும் கட்சியின் கோஷ்டி நலன்களுக்காக அதனுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை என்பதும், அதற்கு மாறாக எல்லா எதிர்க் கட்சிகளையும் நியாயமான, நேர்மையான முறையில் நடத்தியுள்ளதென்பதும், பொது ஜனங்களுக்குள்ள சுதந்திரத்தையும் உரிமைகளையும் விரிவுபடுத்தி இருக்கிறது என்பதும் தெளிவாகத் தெரியவரும்.

மாருக, இதர கட்சிகளின் தலைவர்கள் தான் ஒழுங்கீனத்தையும், பலாத்காரத்தையும் கட்டவிழ்த்துவிடத் திட்டமிட்டும், ராஜ்யத்திலுள்ள ஆதிக்கக் கும்பல்களுக்கு உதவி செய்யக்கூடிய கொள்கைகளை அனுஷ்டித்தும் வந்தனர். மேலும், இந்திய யூனியன் பிரதம மந்திரி என்ற முறையில் தனக்குள்ள பொறுப்புகளையும் உதறித் தள்ளிவிட்டுப் பிரதம மந்திரியே தெட்டத் தெளிவாக ஒரு கட்சிக்காரர் என்ற நிலையை மேற்கொண்டுள்ளார்.

தன்னுடைய கட்சி நலன்களை முன்னிட்டு, கேரள மக்களின் ஜனநாயகத் தீர்ப்பை செல்லாக் காசாக்குவதற்காக, மத்திய அரசாங்கத்தில் தனக்குள்ள அதிகாரத்தை காங்கிரஸ் கட்சி பயன்படுத்த அனுமதிக்கப்பட வேண்டுமா என்பதே, இந்த சூழ்நிலையில், மக்கள் முன்னுள்ள பிரச்சினை.

காங்கிரஸ் கட்சியின் சூழ்ச்சிகளை முறியடிக்கும்படியும், கேரள மந்திரிசபையை ஆதரிக்கும்படியும், காங்கிரஸ் உள்பட சகல கட்சிகளிலும் உள்ள ஜனநாயகவாதிகளையும், எல்லா தொழிற் சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள், இதர பொதுஜன ஸ்தாபனங்களையும் மத்திய நிர்வாகக் கமிட்டி வேண்டிக்கொள்கிறது. எல்லா இடதுசாரிக் கட்சிகளும், காங்கிரஸ் கட்சியின் இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு எதிராக இருப்பார்கள் என்றும் அது நம்புகிறது.

கேரள அரசாங்கம் பிரதிநிதித்துவப் படுத்தும், ஜனநாயக இயக்கத்தின் சாதனைகளையும், பொதுமக்களின் நலன்களையும் பாதுகாப்பதுமட்டுமல்ல இப்போதுள்ள பிரச்சினை. பொதுஜன ஆதரவு பெற்ற, காங்கிரஸ் அல்லாத ஒரு மந்திரிசபை—அதிலும் தொழிலாளிகள், விவசாயிகள், மத்தியதர வர்க்கங்கள், இன்னும் இதர உழைக்கும் மக்களின் நலன்களை முழுக்க முழுக்க பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு மந்திரிசபை—இன்றைய அரசியல் சட்டத்திற்குட்பட்டுச் செயல்பட அனுமதிக்கப்படுமா என்பதும் மக்கள்முன் உள்ள பிரச்னையாக இருக்கிறது.

கேரளத்திலும், நம்நாட்டின் இதர பகுதிகளிலும் உள்ள மக்கள் கேரள அரசாங்கத்தின்பின் அணிதிரண்டு, அதற்கெதிராகப் பிற்போக்கு ஆதிக்க வெறியர்கள் தற்பொழுது செய்யும் சூழ்ச்சிகளை முறியடிப்பார்கள் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நம்பிக்கையுடனிருக்கிறது.

---

ஜனசக்தி பிரஸ், 32, பிராட்வே சென்னை—1